மகளிர் நீதிமன்றம், செங்கல்பட்டு.

முன்னிலை. திருமதி.எஸ்.மோகனகுமாரி, எம்.ஏ.,பி.எல்., அமர்வு நீதிபதி.
மகளிர் நீதிமன்றம், செங்கல்பட்டு (மு.கூ.பொ)

2017ம் ஆண்டு மே திங்கள் 30ம் நாள் செவ்வாய்கிழமை.

சிறப்பு வழக்கு எண்.1/2016

.......

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர்<br>சங்கர் நகர் காவல்நிலையம்,<br>குற்ற எண்.460/2013 |
| எதிரியின் பெயர் | 1. திரு.அரவிந்தன் வயது 19, த/பெ.மாரியப்பன். |
| குற்றச்சாட்டுகள் | 1. எதிரி 16 வயதுடைய யுவராணி (எ) ரஞ்சனா என்ற இளவரை வன்புணர்ச்சி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு பெற்றோரின் பாதுகாப்பில் இருந்தவரை திருமணம் செய்து கொள்வதாகவும் செல்போன் வாங்கி தருவதாகவும் ஆசை வார்த்தைகளை கூறி தாம்பரத்திலிருந்து திருவண்ணாமலைக்கு கடத்திச் சென்று அங்குள்ள ஒரு அம்மன் கோயிலில் வைத்து மஞ்சள் கயிறை எடுத்து அவரது கழுத்தில் கட்டி திருமணம் செய்து கொண்டதாக கூறி அங்கிருந்து பெரும்பாக்கம் என்ற ஊருக்கு கடத்திச் சென்றதன் காரணமாக இதச பிரிவு 366(ஏ)ன் கீழ் எதிரி மீது.<br>2. எதிரி மேற்படி இளவரை பெரும்பாக்கம் என்ற ஊருக்கு கடத்திச் சென்று அங்கு ஒரு வீட்டில் வைத்து இளவர் யுவராணி (எ) ரஞ்சனாவை கட்டாயப்படுத்தி உடலுறவு கொண்டதன் காரணமாக பிரிவு 6 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் எதிரி மீது. |
| குற்றவாளியின் உரை | குற்றவாளி அல்ல. |

WEB COPY

| | |
|---|---|
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி அல்ல. |
| நீதிமன்ற தீர்ப்பு | எதிரி இதச பிரிவு 366(ஏ) மற்றும் பிரிவு 6 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு 11.01.2016 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திருமதி.சி.சீதாலட்சுமி அவர்கள் ஆஜராகியும் எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.கவிதா திரு.திருமுருகன் மற்றும் திரு.பி.வெங்கடேசன் மற்றும் ஜெ.சரளாதேவி ஆகியோர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

WEB COPY

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் யுவராணி (எ) ரஞ்சனா 16 வயது நிரம்பிய இளவர் அம்பத்தூர் ஓ.டி. அருகே உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்த போது இவ்வழக்கின் எதிரி மேற்படி இளவர் குடியிருக்கும் பகுதியில் வசிப்பதால் அவருடன் பழக்கம் ஏற்பட்டு எதிரி மேற்படி இளவரை காதலிப்பதாகவும் அவரையே திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறி இரண்டு வருட காலமாக பழகி வந்துள்ளார் அதன் தொடர்ச்சியாக கடந்த 5.3.2013ம் தேதி காலை 6.00 மணியளவில் சங்கர் நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பொழிச்சலூர் ஆனந்தி நகர், எம்.ஜி.ஆர். தெருவில் பெற்றோர்களுடன் வசித்து வந்த இளவர் யுவராணி (எ) ரஞ்சனாவின் வீட்டிற்கு

எதிரி சென்று மேற்படி இளவரை பார்த்து திருமணம் செய்து கொள்வதாகவும் செல்போன் வாங்கி தருவதாகவும் ஆசை வார்த்தைகளை சொல்லி அழைத்துச் சென்று அங்கிருந்து திருவண்ணாமலைக்கு சென்று அங்குள்ள ஒரு அம்மன் கோயிலில் வைத்து மஞ்சள் கயிறை எடுத்து இளவரின் கழுத்தில் கட்டி திருமணம் செய்து கொண்டதாக கூறி அங்கிருந்து பெரும்பாக்கம் என்ற ஊருக்கு அழைத்துச் சென்று ஒரு வீட்டில் தங்க வைத்து எதிரி மேற்படி இளவரை கட்டாயப்படுத்தி உடலுறவு கொண்டுள்ளார். பின்னர் தொடர்ந்து 18 நாட்கள் ஆசை வார்த்தைகள் கூறி பலமுறை உடலுறவு கொண்டுள்ளார். இவ்வாறு எதிரி 16 வயதான யுவராணி (எ) ரஞ்சனா இளவர் என்று தெரிந்திருந்தும் அவரை சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொள்ள முடியாது என்று தெரிந்தே அவருடன் உடலுறவு கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில் மேற்படி இளவரை திருவண்ணாமலைக்கு ஆசை வார்த்தை கூறி கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்ததன் காரணமாக எதிரி இதச பிரிவு 366(எ) மற்றும் பிரிவு 4 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சங்கர் நகர் காவல்துறை ஆய்வாளரால் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

WEB COPY

2. இவ்வழக்கின் எதிரியும் பாதிக்கப்பட்ட பெண்ணும் இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது எதிரிக்கும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் இவ்வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரி மீது இதச பிரிவு 366(ஏ) மற்றும் பிரிவு 6 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரியிடம் குற்றம் குறித்து வினவ எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி அல்ல என கூறினார்.

4. எதிரி குற்றத்தினை மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப

நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசு தரப்பில் 1 முதல் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 14 குறியிடப்பட்டுள்ளது. சான்று பொருள்கள் 1 முதல் 9 குறியிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவாணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 பிறழ்சாட்சிகளாக கருதப்பட்டுள்ள நிலையில் ஏனைய அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து வெளிவரும் வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

அ.சா.3 மருத்துவர் திரு.பாலாஜிராஜசேகர் தனது சாட்சியத்தில் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த துறையில் போதகராக பணிபுரிந்து வருவதாகவும் கடந்த 26.3.2013 அன்று இதே துறையில் பணியிலிருந்த போது அரவிந்த் என்பவரை குற்றவியல் நடுவர் தாம்பரம் அவர்களின் கடிதத்தை பெற்று மருத்துவ பரிசோதனை செய்ததாகவும் அந்த பரிசோதனையில் அவர் ஆண்மைதன்மை அற்றவர் என்று கூறுவதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்று கருத்துக்கூறி சான்று அளித்துள்ளதாகவும் அந்த சான்று அ.சா.ஆ.1 என்றும் மேலும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட நபரின் வயதிற்கான சான்று அளித்துள்ளதாகவும் அவர் 18 முதல் 19 வயதிற்குட்பட்டவராக இருக்கலாம் என்று கருத்து தெரிவித்து சான்று அளித்துள்ளதாகவும் அந்த சான்று அ.சா.ஆ.2 என்றும் இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 திரு.ராஜசேகரன் தனது சாட்சியத்தில் தற்போது சென்னை டி.பி.சத்திரத்தில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் 2013 வருடம் சங்கர் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 13.03.2013ம் தேதி திரு.ரவி த/பெ.கோபாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் அ.சா.ஆ.3ஐ பெற்றதாகவும் அதன் அடிப்படையில் நிலைய குற்ற

WEB COPY

எண்.460/2013 பிரிவு சிறுமி காணவில்லை என்று வழக்கை பதிவு செய்து அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும் பின்பு இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 23.03.2013ம் தேதி தனக்கு கிடைத்த தகவல் படி எதிரியை சங்கர் நகர் பம்பல் பகுதியில் வைத்து கைது செய்து விசாரிக்க அவர் சாட்சிகள் கண்ணபிரான் மற்றும் கன்னியப்பன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் பாதிக்கப்பட்ட யுவராணி என்ற ரஞ்சனா வயது 17 என்பவரை விசாரிக்கும்போது, எதிரி 5.3.2013ம் தேதி அவரை திருமணம் செய்து கொள்வதாக கூறி அழைத்துச் சென்று திருவண்ணாமலை மாவட்டம் பெரும்பாக்கம் என்ற கிராமத்தில் வைத்து உடலுறவு கொண்ட விவரத்தை கூறியுள்ளார். மேற்படி பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் பிரிவு சிறுமி காணவில்லை என்ற பிரிவில் இருந்து பிரிவு 366(ஏ), 376 இதசவின் படி பிரிவு மாற்றுதல் அறிக்கை அ.சா.ஆ.5 தயார் செய்துள்ளார். பின்னர் எதிரியையும் பாதிக்கப்பட்ட இளம்பெண்ணையும் 19.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து பாதிக்கப்பட்ட இளம்பெண்ணுக்கு பெண் தலைமை காவலர் 17698 திருமதி.ஜாய்ஸ் லவ்லி என்பவர் மூலம் அந்த இளம்பெண்ணிற்கு மாற்று உடை கொடுத்து அவர் அணிந்திருந்த உடைகளான சா.பொ.1. கரும் பச்சை கலர் சுடிதார் சமிக்கை டிசைன் உள்ளது, சா.பொ.2.சாக்லெட் கலர் பேண்ட், சா.பொ.3,சாக்லெட் கலர் மற்றும் பச்சை கலந்த துப்பட்டா, சா.பொ.4,கருப்பு கலர் சிம்மி, சா.பொ.5.டார்க் புளூ கலர் பூ போட்ட ஜட்டி ஒன்றையும் படிவம் 95ல் கைப்பற்றியுள்ளார். பின்பு எதிரிக்கு மாற்று உடை கொடுத்து எதிரியிடமிருந்து சா.பொ.6 கருப்பு வெள்ளை கலர் கட்டம்போட்ட முழுக்கை சட்டை ஒன்றையும், சா.பொ.7 புளூ கலர் பேண்ட் (லோயர்), சா.பொ.8 காவி கலர் பணியன், சா.பொ.9 சிவப்பு கலர் ஜட்டி ஒன்று, ஆகியவற்றை அ.சா.ஆ.14 படிவம் 95 மூலம் கைப்பற்றியுள்ளார்.

WEB COPY

அப்படிவத்தில் எதிரியிடமிருந்தும் பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்தம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. பிறகு எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த பெண்ணை அன்று இரவு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பாதுகாப்பில் வைத்து பிறகு கெல்லீஸ் இல்லத்திற்கு பாதுகாப்பில் வைக்கப்பட்டார் என்றும் பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவ பரிசோதனை செய்ய அ.சா.ஆ.6 வேண்டுகோளும் எதிரியை மருத்துவ பரிசோதனை செய்ய அ.சா.ஆ.7 வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி எதிரி மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை 27.03.2013ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அதனை தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைத்துள்ளார். எதிரியை பரிசோதனை செய்த மருத்துவர் பாலாஜிராஜசேகர் என்பவரை விசாரித்து அவரது சான்றை பெற்றுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்ணை பரிசோதனை செய்த மருத்துவர் பராசக்தி அவர்களை விசாரித்து அவரிடமிருந்து பாதிக்கப்பட்ட பெண்ணின் மருத்துவ பரிசோதனை சான்றிதழ் அ.த.சா.ஆ.8, வயது சான்று அ.சா.ஆ.9 பெற்றுள்ளார். மேற்படி பெண்ணின் வயது அறிய அவர் பெற்றோரிடம் விசாரித்து அவர்களிடமிருந்து வயது குறித்த உண்மை நகல் அ.த.சா.ஆ.10 பெற்றுள்ளார். மேலும் அ.சா.4 புலன் ஆய்வு அதிகாரி தனது சாட்சியத்தில் மேற்படி சான்று பொருட்களை பரிசோதனை செய்யசொல்லி அ.சா.ஆ.11 மனு நீதிமன்றத்தில் கொடுத்துள்ளார். அதன்படி மேற்படி தடய அறிவியல் துறையினர் பரிசோதனை செய்து கொடுத்த அ.சா.ஆ.12 இராசாயண பரிசோதனை சான்றிதழ் பெற்றுள்ளார். அதன்பிறகு செங்கல்பட்டு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் சிஆர்பி நெம்பர் 21/2015 என்ற எண்ணில் போட்ட உத்தரவின் படி தனக்கு பின்பு பணியில் இருந்த ஆய்வாளர் மோகன்தாஸ் என்பவர் 366(ஏ), 376 இதசவில் இருந்து 366(ஏ), உ/இ பிரிவு 4 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் சட்ட பிரிவு மாற்றுதல் அறிக்கை அ.சா.ஆ.13ஐ

WEB COPY

நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அதன்பிறகு எதிரியின் மீது பிரிவு 366(ஏ), உ/இ பிரிவு 4 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசுத் தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமானவைகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. 313(1)(பி) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி அவற்றை மறுத்து தன் மீது பொய் வழக்கு புனையப்பட்டதாக தெரிவித்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதென்றால் எதிரியின் மீது இதச பிரிவு 366(ஏ) மற்றும் பிரிவு 6 குழந்தைகள் பாலியியல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நிருபிக்கப்பட்டுள்ளதா? என்று காண்பதேயாகும்.

WEB COPY

8. பிரச்சனை.

இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது. எதிரியின் மீது இதச பிரிவு 366(ஏ) மற்றும் பிரிவு 6 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சிய பட்டியலில் 13 சாட்சிகள் குறிப்பிட்டிருந்தாலும் சாட்சிய பட்டியலில் குறிப்பிடப்பட்ட சாட்சிகள் 1, 3, 4, 6 முதல் 9, 11 மற்றும் 12 ஆகியோர் விசாரிக்கப்பட வேண்டியதில்லை என்று அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்குறவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் மீதமுள்ள சாட்சிய பட்டியல் சாட்சிகள் 2, 5, 10, 13 ஆகியோர் மட்டுமே அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியிடப்பட்டு சா.பொ.1 முதல் சா.பொ.9 குறியிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

9. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் எதிரியின் மீது இதச பிரிவு 366(ஏ) மற்றும் பிரிவு 6 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பில் அ.சா.1 முதல் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் 14 சான்றாவணங்களும் சா.பொ.1 முதல் சா.பொ.9 வரையிலானவைகள் குறியிடப்பட்டுள்ளது என்றும் மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரி தண்டிக்கப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

10. அதற்கு கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்ணான அ.சா.2ம் அவரது தாயரான அ.சா.1ம் எதிரியின் மீதான குற்றச்சாட்டை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளனர் என்றும் அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்தும் அரசு தரப்புக்கு சாதகமான அம்சங்கள் எதுவும் வெளிக்கொணரப்படவில்லை என்றும் இந்நிலையில் அரசு அலுவலர்களான அ.சா.3 மருத்துவர் மற்றும் அ.சா.4 புலன் ஆய்வு அதிகாரியின் சாட்சியம் மட்டுமே எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதல்ல என்றும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

WEB COPY

11. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு, அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கில் புகார் அ.சா.ஆ.3 ஆக குறியிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை ரவி என்பவர் புகார் கொடுத்துள்ளார். புகாரில் தன் மகள் ஆர்.யுவராணி வயது 17 (ரஞ்சனா) செல்போனில் யாரோ ஒரு பையனுடன் பேசிக் கொண்டிருந்ததை கவனித்தேன். ஆகையால் எனக்கு சந்தேகம் ஏற்பட்டு கேட்டதில் அவள் சரியான பதில் சொல்லவில்லை. அதனால் எனக்கு அவள் மீது சந்தேகம் ஏற்பட்டது. சிலரை விசாரித்ததில் வி.அரவிந்தன் என்ற பையனை காதலிப்பதாக தெரிய

வந்தது. அதனால் தான் இரண்டு மாதங்களுக்கு முன் தனது மகளை பொழிச்சலூரில் உள்ள தனது சகோதரர் ஜி.பழனி அவர்கள் வீட்டில் தங்க வைத்தேன். அவளும் அங்கு தங்கியிருந்தாள். 5.3.2013ம் தேதி சுமார் காலை 6 மணியளவில் காணாமல் போய் விட்டாள். நாங்கள் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. எனவே காணாமல் போன தனது மகளை கண்டுபிடித்து தருமாறு கேட்டுள்ளார். இவ்வழக்கில் புகாரில் காணாமல் போனதாக சொல்லப்படும் யுவராணி (எ) ரஞ்சனா அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தன் அப்பா பெயர் ரவி. தன் அம்மா பெயர் ராஜேஸ்வரி. ஆஜர் எதிரியை எனக்கு யார் என்று தெரியாது. இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. தன்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்பது எனக்கு ஞாபகமில்லை. தான் போலிசாரிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. தன் தந்தை ரவி கத்தார் நாட்டில் வேலை செய்து வருகிறார். அவர் வரும் காலம் எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் அவரை பிறழ்சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்தும் எப்பலனும் இல்லை. இவ்வழக்கில் புகார் கொடுத்த ரவி என்பவர் சாட்சி பட்டியலில் முதல் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளார். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணான அ.சா.2 பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் புகார் கொடுத்த அவரது தந்தை ரவி என்பவரை சாட்சியாக விசாரிக்க வேண்டியதில்லை என்று கூறி மேற்படி சாட்சியை நீக்குறவு செய்வதாக அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்குறிப்பு செய்துள்ளார். மேலும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் தாயரான ராஜேஸ்வரி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. யுவராணி என் மகள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக்கப்பட்டு குறுக்கு

WEB COPY

விசாரணை செய்தும் எப்பலனும் இல்லை. அ.சா.3 மருத்துவர் பாலாஜி ராஜசேகர் எதிரிக்கு ஆண்மைதன்மை குறித்து மருத்துவ பரிசோதனை செய்ததாகவும் அவர் ஆண்மைதன்மை அற்றவர் என்று கூறுவதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்று கருத்துக்கூறி சான்று அ.சா.ஆ.1 அளித்துள்ளது பற்றியும் மேலும் எதிரியின் வயது குறித்து பரிசோதனை செய்து அவர் 18 முதல் 19 வயதிற்குட்பட்டவராக இருக்கலாம் என்று கருத்து தெரிவித்து சான்றிதழ் அ.சா.ஆ.2 வழங்கியது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கை புலன் ஆய்வு செய்த அதிகாரி அ.சா.4 ராஜசேகரன் 2013 வருடம் சங்கர் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 13.03.2013ம் தேதி திரு.ரவி த/பெ.கோபாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் அ.சா.ஆ.3ஐ பெற்றதாகவும் அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண்.460/2013 பிரிவு சிறுமி காணவில்லை என்று வழக்கை பதிவு செய்து அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும் பின்பு இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 23.03.2013ம் தேதி தனக்கு கிடைத்த தகவல் படி எதிரியை சங்கர் நகர் பம்பல் பகுதியில் வைத்து கைது செய்து விசாரிக்க அவர் சாட்சிகள் கண்ணபிரான் மற்றும் கன்னியப்பன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் பாதிக்கப்பட்ட யுவராணி என்ற ரஞ்சனா வயது 17 என்பவரை விசாரிக்கும்போது, எதிரி 5.3.2013ம் தேதி அவரை திருமணம் செய்து கொள்வதாக கூறி அழைத்துச் சென்று திருவண்ணாமலை மாவட்டம் பெரும்பாக்கம் என்ற கிராமத்தில் வைத்து உடலுறவு கொண்ட விவரத்தை கூறியுள்ளார். மேற்படி பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் பிரிவு சிறுமி காணவில்லை என்ற பிரிவில் இருந்து பிரிவு 366(ஏ), 376 இதசவின் படி பிரிவு மாற்றுதல் அறிக்கை அ.சா.ஆ.5 தயார் செய்துள்ளார். பின்னர் எதிரியையும் பாதிக்கப்பட்ட

WEB COPY

இளம்பெண்ணையும் 19.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து பாதிக்கப்பட்ட இளம்பெண்ணுக்கு பெண் தலைமை காவலர் 17698 திருமதி.ஜாய்ஸ் லவ்லி என்பவர் மூலம் அந்த இளம்பெண்ணிற்கு மாற்று உடை கொடுத்து அவர் அணிந்திருந்த உடைகளான சா.பொ.1. கரும் பச்சை கலர் சுடிதார் சமிக்கை டிசைன் உள்ளது, சா.பொ.2.சாக்லெட் கலர் பேண்ட், சா.பொ.3,சாக்லெட் கலர் மற்றும் பச்சை கலந்த துப்பட்டா, சா.பொ.4,கருப்பு கலர் சிம்மி, சா.பொ.5.டார்க் புளு கலர் பூ போட்ட ஜட்டி ஒன்றையும் படிவம் 95ல் கைப்பற்றியுள்ளார். பின்பு எதிரிக்கு மாற்று உடை கொடுத்து எதிரியிடமிருந்து சா.பொ.6 கருப்பு வெள்ளை கலர் கட்டம்போட்ட முழுக்கை சட்டை ஒன்றையும், சா.பொ.7 புளு கலர் பேண்ட் (லோயர்), சா.பொ.8 காவி கலர் பணியன், சா.பொ.9 சிவப்பு கலர் ஜட்டி ஒன்று, ஆகியவற்றை அ.சா.ஆ.14 படிவம் 95 மூலம் கைப்பற்றியுள்ளார். அப்படிவத்தில் எதிரியிடமிருந்தும் பாதிக்கப்பட்ட பெண்ணிடமிருந்தம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. பிறகு எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த பெண்ணை அன்று இரவு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பாதுகாப்பில் வைத்து பிறகு கெல்லீஸ் இல்லத்திற்கு பாதுகாப்பில் வைக்கப்பட்டார் என்றும் பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவ பரிசோதனை செய்ய அ.சா.ஆ.6 வேண்டுகோளும் எதிரியை மருத்துவ பரிசோதனை செய்ய அ.சா.ஆ.7 வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். மேற்படி எதிரி மற்றும் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை 27.03.2013ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அதனை தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைத்துள்ளார். எதிரியை பரிசோதனை செய்த மருத்துவர் பாலாஜிராஜசேகர் என்பவரை விசாரித்து அவரது சான்றை பெற்றுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்ணை பரிசோதனை செய்த மருத்துவர் பராசக்தி அவர்களை விசாரித்து அவரிடமிருந்து பாதிக்கப்பட்ட பெண்ணின் மருத்துவ பரிசோதனை சான்றிதழ் அ.த.சா.ஆ.8, வயது சான்று அ.சா.ஆ.9

WEB COPY

பெற்றுள்ளார். மேற்படி பெண்ணின் வயது அறிய அவர் பெற்றோரிடம் விசாரித்து அவர்களிடமிருந்து வயது குறித்த உண்மை நகல் அ.த.சா.ஆ.10 பெற்றுள்ளார். மேலும் அ.சா.4 புலன் ஆய்வு அதிகாரி தனது சாட்சியத்தில் மேற்படி சான்று பொருட்களை பரிசோதனை செய்யசொல்லி அ.சா.ஆ.11 மனு நீதிமன்றத்தில் கொடுத்துள்ளார். அதன்படி மேற்படி தடய அறிவியல் துறையினர் பரிசோதனை செய்து கொடுத்த அ.சா.ஆ.12 இராசாயண பரிசோதனை சான்றிதழ் பெற்றுள்ளார். அதன்பிறகு செங்கல்பட்டு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் சிஆர்பி நெம்பர் 21/2015 என்ற எண்ணில் போட்ட உத்தரவின் படி தனக்கு பின்பு பணியில் இருந்த ஆய்வாளர் மோகன்தாஸ் என்பவர் 366(ஏ), 376 இதசவில் இருந்து 366(ஏ), உ/இ பிரிவு 4 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் சட்ட பிரிவு மாற்றுதல் அறிக்கை அ.சா.ஆ.13ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். அதன்பிறகு எதிரியின் மீது பிரிவு 366(ஏ), உ/இ பிரிவு 4 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2012ன் கீழ் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

12. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணான அ.சா.2 யுவராணி என்பவரே பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் அவரது தகப்பனார் மற்றும் இவ்வழக்கின் புகார்தாரரான ரவி என்பவரை விசாரிக்க வேண்டியதில்லை என்று அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை நீக்குறவு செய்யச் சொல்லி மேற்குறிப்பு செய்துள்ளதால் மேற்படி புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அதனை போலவே சாட்சிய பட்டிலியல் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சாட்சிகளான 3, 4, 6 முதல் 9, 11 மற்றும் 12 ஆகியோர் விசாரிக்கப்பட வேண்டியதில்லை என்று அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்குறவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்ணான அ.சா.2ம் அவரது தாயரான அ.சா.1ம் எதிரியின் மீதான குற்றத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காமல்

பிறழ்சாட்சியாக மாறியுள்ளனர். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்தும் அரசு தரப்புக்கு சாதகமான அம்சங்கள் எதுவும் வெளிக்கொணரப்படவில்லை. இந்நிலையில் அரசு அலுவலர்களான அ.சா.3 ஆன மருத்துவர் மற்றும் அ.சா.4 புலன் ஆய்வு அதிகாரிகளின் சாட்சியமும் அவர்கள் மூலம் குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மட்டுமே எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதல்ல. ஆகவே இவ்வாறான நிலையில் எதிரி மீது அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி இதச பிரிவு 366(ஏ) மற்றும் பிரிவு 6 குழந்தைகள் பாலியியல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்யப்படுகிறது.

13. முடிவில் எதிரி இதச பிரிவு 366(ஏ) மற்றும் பிரிவு 6 குழந்தைகள் பாலியியல் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

WEB COPY

14. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 முதல் சா.பொ.9 வரையிலான பொருள்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்கவும் அல்லது மேல்முறையீடு செய்யப்பட்டால் மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுபடி செயல்பட உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்த பின்பு திருத்தங்களுக்கு பின்னர் 2017ம் ஆண்டு மே திங்கள் 30ம் நாள் என்னால் திறந்த நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

(ஒம்/=எஸ்.மோகனகுமாரி)
அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம்,செங்கல்பட்டு
(மு.கூ.பொ)

<u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1/ திருமதி. ராஜேஸ்வரி (பிறழ்சாட்சி)

அ.சா.2/ செல்வி.யுவராணி (பிறழ்சாட்சி)

அ.சா3/ திரு.பாலாஜி ராஜசேகர் (அரசு மருத்துவர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனை)

அ.சா.4/ திரு.ராஜசேகர் (காவல் ஆய்வாளர்)

<u>அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.03.2013 | எதிரியின் மருத்துவ பரிசோதனை சான்றிதழ். |
| அ.சா.ஆ.2. | 26.03.2013 | எதிரியின் வயது சான்றிதழ். |
| அ.சா.ஆ.3. | 13.03.2013 | புகார் |
| அ.சா.ஆ.4. | 13.03.2013 | அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.5 | 23.03.2013 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை. |
| அ.சா.ஆ.6 | 24.03.2013 | பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவ பரிசோதனை செய்ய நீதித்துறை நடுவருக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம். |
| அ.சா.ஆ.7 | 24.03.2013 | எதிரியை மருத்துவ பரிசோதனை செய்ய நீதித்துறை நடுவருக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம். |
| அ.சா.ஆ.8 | 26.03.2013 | பாதிக்கப்பட்ட பெண்ணின் மருத்துவ பரிசோதனை சான்றிதழ். |
| அ.சா.ஆ.9 | 26.03.2103 | பாதிக்கப்பட்ட பெண்ணின் வயது சான்றிதழ். |
| அ.சா.ஆ.10 | 26.04.2013 | பாதிக்கப்பட்ட பெண்ணின் பிறப்பு சான்றிதழ் நகல். |
| அ.சா.ஆ.11 | 24.03.2013 | சான்று பொருள்களை இராசாயண பரிசோதனை செய்து சான்று வழங்குமாறு தடய அறிவியல் துறைக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதம். |
| அ.சா.ஆ.12 | 22.04.2013 | இராசாயண பரிசோதனை சான்று. |
| அ.சா.ஆ.13 | 10.02.2014 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. |
| அ.சா.ஆ.14 | 23.03.2013 | படிவம் 91 |

WEB COPY

<u>எதிரித் தரப்பு சாட்சியம் மற்றும்  சான்றாவணங்கள்</u>

இல்லை.

<u>அரசு தரப்பு  சான்றுப் பொருட்கள்..</u>

சா.பொ.1   கரும்பச்சை கலர் சுடிதார் சமிக்கை டிசைன் உள்ளது.

சா.பொ.2/   சாக்லெட் கலர் பேண்ட்.

சா.பொ.3/   சாக்லெட் கலர் மற்றும் பச்சைக் கலர் துப்பட்டா.

சா.பொ.4/   கருப்பு கலர் சிம்மி.

சா.பொ.5/   டார்க் புளூ கலர் பூபோட்ட ஜட்டி.

சா.பொ.6/   புளூ கருப்பு வெள்ளை கலர் கட்டம் போட்ட முழுக்கை சட்டை.

சா.பொ.7/   புளூ கலர் பேண்ட் (லோயர்)

சா.பொ.8/   காவி கலர் பனியன் ஒன்று.

சா.பொ.9/   சிகப்பு கலர் ஜட்டி ஒன்று.

WEB COPY

(ஒம்/=எஸ்.மோகனகுமாரி)
அமர்வு நீதிபதி
மகளிர் நீதிமன்றம், செங்கற்பட்டு.
(மு.கூ.பொ)

WEB COPY

............................................................

வரைவு/சீரான தீர்ப்புரை

சிறப்பு வழக்கு எண். 1/2016

நாள் 30.05.2017

மகளிர் நீதிமன்றம் செங்கற்பட்டு.

............................................................